DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் புதன்கிழமை 25ம் நாள் சாட்சியாகிய பத்மாவதி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பத்மாவதி | வயது | 49 |
| க/பெ. | சுதர்சனம் | இனம் | பெண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.10/2022**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>குறுக்கு விசாரணை 25.06.2025 ம.சா.1</u>**

1. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எனது திருமணம் காதல் திருமணமா என்றால் ஆமாம். இருவீட்டாரின் சம்மதத்துடன் நடந்ததா என்றால் சம்மதத்துடன் நடந்தது. எனக்கு எத்தனை குழந்தைகள் ஒரு பெண் உள்ளார்.

2. நானும், எதிர்மனுதாரரும் எவ்வளவு நாட்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 28 வருடங்கள். எனக்கும், எதிர்மனுதாரருக்கும் என்ன பிரச்சனை என்றால் நான் பார்த்த மாப்பிள்ளையை எனது மகள் விருப்பப்பட்டு திருமணம் செய்துகொண்டதால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது.

3. எனது மகளின் திருமணத்திற்கு முன்பு வரை எங்களுக்குள் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். எனது மகளின் திருமணத்திற்கு எனது கணவர் வந்தாரா என்றால் இல்லை. அவருக்கு விருப்பம் இல்லை என்பதால் வரவில்லை. எனது மகள் தற்போது அவரது கணவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறாரா என்றால் இல்லை.

4. எதிர்மனுதாரர் 2008ம் வருடம் அரக்கோணத்தில் சாரதா சௌத்திரி நகரில் உள்ள சொத்தை என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். 2021ம் வருடம் அரக்கோணத்தில் ஐகான் சிட்டியில் 2 வீட்டு மனைகளை எதிர்மனுதாரர் என் பெயரில் வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். நான் 2024ம் வருடம் ஒரு மனையை எதிர்மனுதாரருக்கு தெரியாமல் விற்றுவிட்டேன் என்றால்

சரிதான். கடன் இருந்ததால் விற்றுவிட்டேன். எனக்கு கடன் எதுவும் இல்லை என்றாலும், எதிர்மனுதாரர் கடன்களை அடைத்து விட்டார் என்றால் சரியல்ல.

5. எதிர்மனுதாரர் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது மகளை, எதிர்மனுதாரர்தான் தற்போது பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு எந்த இடத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் திருத்தணி கோவிலில் நடைபெற்றது. யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் இருவீட்டாரும் வந்தார்கள்.

6. எனக்கு திருமணம் நடந்தபோது எனது பெற்றோர் உயிருடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எனது திருமணத்தை பதிவு செய்யும்போது எனது பெற்றோர் உயிருடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். பதிவு செய்யும்போது ஏன் எனது பெற்றோர் வரவில்லை என்றால் வயதானவர்கள் என்பதால் வரவில்லை. நானும், எதிர்மனுதாரரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இருவரும் வேறுவேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

7. எதிர்மனுதாரருக்கு முதல் திருமணம் நடந்தது பற்றி எனக்கு தெரியும் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் முதல் மனைவிக்கு தற்போது வரை பணம் அனுப்பி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருக்கு முதல் திருமணம் மூலம் இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளதை தெரிந்துதான் நான் திருமணம் செய்துகொண்டேன் என்றால் இல்லை.

8. எதிர்மனுதாரர் எங்கு வேலை செய்கிறார் என்றால் இச்சிபுத்தூரில் உள்ள M.R.F நிறுவனத்தில் வேலை செய்கிறார். எதிர்மனுதாரரின் பணிபதிவேட்டில் எனது பெயர் இல்லை என்றால் எனக்கு தெரியாது. முதல் மனைவியின் பெயர்தான் பணிப்பதிவேட்டில் உள்ளது என்றால் எனக்கு முதல் மனைவி பற்றி எதுவும் சொல்லவில்லை. எனது வீட்டில் சின்ன மளிகை கடையை எதிர்மனுதாரர் ஆரம்பித்து கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் தற்போது இல்லை.

9. பொருட்கள் வாங்க ஆள்இல்லை என்பதாலும், எனக்கு மூட்டு வலி உள்ளதால் கடையை நடத்தவில்லை. எனக்கு இட்லி மாவு அரைக்கும் இயந்திரத்தை எதிர்மனுதாரர் வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். அது பழுதாகிவிட்டது. நானும், எதிர்மனுதாரரும் எவ்வளவு நாட்களாக பிரிந்துள்ளோம் என்றால் 4 வருடமாக பிரிந்து உள்ளோம்.

10. எனக்கு தேவையான சவரட்சனைகளை செய்துவிட்டுதான் எதிர்மனுதாரர் பிரிந்து சென்றார் என்றால் சரிதான். வீட்டை மட்டும் வைத்து நான் என்ன செய்ய முடியும். நான்தான் எதிர்மனுதாரரை சண்டை போட்டு வீட்டை விட்டு அனுப்பினேன் என்றால் இல்லை. நான் தொந்தரவு செய்ததால்தான் எதிர்மனுதாரர் வீட்டை விட்டு சென்றார் என்றால் இல்லை.

11. நான் சோற்றில் விஷம் வைத்துவிடுவேன் என்று மிரட்டியதால்தான் எதிர்மனுதாரர், எனது மகள் வீட்டை விட்டு சென்றார்கள் என்றால் இல்லை. நான் எனது மகளுக்கு ஆதரவாக இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்தான் தவறாக எனது மகளுக்கு சொல்லிகொடுத்தார். எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் எனது மகள் மட்டும் வந்தால் போதும். நான் சமரச மையத்திற்கு ஏன் வரவில்லை என்றால் ஒருமுறை வந்தேன். அதன்பிறகு மூட்டுவலி என்பதால் வரவில்லை. எனது மகள் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும், நான்தான் மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

12. நான்தான் எதிர்மனுதாரர், எனது மகளை சேர்ந்து வாழ அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. மனுவில் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. எனக்கு எனது மகள், ஜீவனாம்சம் வேண்டும்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.